

# New Vice Principal St. John's College.

Mr. Jeyam Amalaseelan has been appointed Vice Principal of St John's College, Jaffna. He will assume duties as Vice Principal, on 1st January 2000.

Mr. Amalaseelan is 54 years old. He joined the Tutorial staff of St. John's College in 1971. after graduating from the University of Ceylon, Peradeniya. He holds a Diploma in Education. He teaches Economics in the Advanced Level Classes and Social Studies and Tamil in the G. C. E. (Ordinary Level) Classes. He has contributed much to Sports and other Exra-curricular activiiies of the College. At present he is Prefect of Games of the College.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 17th. December 1999 No. 24

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


## Wattala Church

Our Bishop dedicated the reconstructed Church at Wattala on Sunday the 28th of November 1999. The reconstruction was done at a cost of Rs. 500, 000/-.

## Heavy Rains

Jaffna experienced a prolonged and heavr rainy season this year Since rains were spread out. for a long period it brought more benefits and less loss to the farmers

## Pastor Resumes Work:

Rev K A Selvanayagam rusumed work at the Jaffna Diocese in October 1999.

After spending about three years in India, he is now the Parish Priest of the C S I Church at Karainagar.

## *Drieberg College Team win First Places:*

The Soccer Team of Drieberg College, Chavakachcheri, has won the Soccer Tournament conducted by the Education Circuit of Tenmarachy, They won the First Places in Under 16 Group

## Congratulations

Mr. Rohan son of Late Raju and Mrs Raju of Chavakachcheri has been appointed Justices of Peace by the Government of Sri Lanka.

The "Morning Star" congratulates him on this honour given to him and the Chavachcheri Church.

## J. C. I. T. & A Christmas Celebration (OLI VILLA)

Christmas Celebrations (OLI VILLA) were conducted by the Agriculture Institute on Saturday the 11th December 1999 and by the Technical Institute on Wednesday the 15th of December 1999.

The Bishop thanked Mr. Kugathasan, Principal, Jaffna College Agriculture Institute and Mr. Noel Hoole the the Acting Director of the Technical Institute for organising the Christmas Parties.

## *A Jumbo Size Plantian Bunch*

Mr. A. S Ariyaratnam of 707, Hospital Road, Jaffna was the proud owner of a bunch of Plantain 6 feet long, on wednesday the 10th November 1999

It was biggest plantain bunch seen in Jaffna in recent times. It was sold to a neghibouring soop for Rs. 75/- (ONE U. S Dollar). We are happy to inform our readers that Mr. R. S. Ariaratnam has donated the house at 707, with this fertile land to the Jaffna Diocese of the Church of South India.

# A Christmas Message

"With God nothing shall be impossible" These were the words of angel Gabriel to Mary (LK 1:37)

What angel Gabriel told Mary, Jesus proclaimed later to the whole world and said "With god all things are possible" (M.K 14 : 36)

We are all tired of the civil war in Sri-Lanka The intensity of which is unparalleled in recent history - 11 deaths per day 20. 000 widows below the age of 35 in NE Province and highest suicide rate in the world. It is only by divine intervention peace can be restored in Sri Lanka.

Let the Joy of our Christmas festivities be based on God's Love for us, and on the divine resources available to man through his self revelation. The call of Christmas is a call to look up to God' to rise above the clouds of conflicting and ideas, rival people May the peace and joy of Christmas be with you through he New year.



Bishop S. J.



*Morning Star & A. C. M. Press wish all readers A Merry Christmas and A Bright, Prosperous and Peaceful New Year. May the Lord Almighty grant you, and all People in our country Peace and joy.*

## Pandathamani Stamp

A Postal Stamp to mark the 100th Birth Anniversary of Pandathamani S. Kanapathipillai was released on Saturday the 4th December 1999, at the Kailasapathy Acutitorium University of Jaffna. Dr. S. Sivalingarajah, Head of the Department of Tamil, University of Jaffna, presided over the function.. This function was organised by the Old Students of Pandathamani Kanapathipillai.

## *The Synod of Church of South India.*

The next Synod of the Church of South India, will be held from 12th to 17th January 2000.

Apart from the Bishop, the following shall attend the Synod Revds. A. Jeyakumaran, E. P Solomons, Messrs G. Rajanayagam, A. Gananadasan, Mrs. Vasanthy Rajaratnam and Miss E. S. Bavasingam.

# Christmas Special Issue

# உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை

# உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி

அருள்திரு டி. ஆர். அம்பலவாணர் M. A, B. D

இறைவன் அன்பின் திருவுவாக இவ்வுலகில் உற்பவித்த நிகழ்ச்சியை நினைவுகூரும் 'கிறிஸ்மஸ்'' பண்டிகையை மறுபடியும் கொண்டாடப் போகிறோம்.

கடவுள் ஏழையாக வந்ததன் நோக்கம் உலகில் சமாதானமும், மனிதனுக்கும் கடவுளுக்குமிடையில் ஒப்புரவும், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் அமைதியும் நிலவ வேண்டும் என்பதே.

உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உலகிலே அவர் தயவு பெற்றவக்கு அமைதி, என வானவர் அன்று இசைத்த கீதத்தின் செம்மை பொருள் இதுவே.

இதுவே மக்களுக்கெல்லாம் மபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி; இச்செய்தி கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல எல்லா மக்களுக்குமுரியது.

கடவுள் தரும் சமாதானத்தைப் பெறுவது எளிதல்ல. நம்மில் உள்ள தன்னலங்கருதும் போக்கு, உணர்ச்சி வயப்பட்டு மேற்போக்காய் வாழும் பொய் வாழ்க்கை ஆகியவற்றிற்குத் தீர்ப்பளித்த பின்னரே கடவுளின் நிலையான அமைதி நமக்குள் ஈவாக இறங்கும். மதிப்புக்குள் அடங்கா அன்பையும் தன்னையே தியாகம் செய்யும் பண்பையும் கொண்டவருக்குள்ளேயே இவ்வமைதி நீங்காது நிலைக்கும்.



இவ்வுலகில் நிரந்தர சமாதானம் ஏற்படத்தக்க வழியுண்டு என்ற நம்பிக்கையை உண்டாக்கிய திருநாளே கிறிஸ்மஸ் பெருநாள் இதனை நாம் கொண்டாடும் இந்நாட்களில் உலகின் பல பாகங்களில் நடைபெறுகின்ற போர் சமாதானத்தைக் கெடுக்கின்றதென்பது உண்மை. ஆனாலும் போர் நிலை சமாதானதைக் கெடுப்பது போல், அநீதியும் சமாதனத்திற்குக் கேடு விளைகின்றதெனபதையும் அறிக. குண்டு வீச்சுக்கள் மட்டும் மனித அமைதியைக் கெடுப்பதில்லை

மனிதனின் அடிப்படை உரிமைகளை மதியாத எந்தச்செயலும் சிறுபான்மையினரென்றோ அல்லது இனம் மொழி மதம் காரணமாகவோ ஒருவர் அடுத்தவரை தனியாக ஒதுக்குதலும் ஆகிய இவையாவும் உள்ளத்தை ஒடுக்கி உயிர்சக்திகளை வற்றச் செய்கின்ற செயல்களே. இதனாலேயே இன்று திருச்சபையின் பல பகுதிகளில் கிறிஸ்து பிறந்த பெரு மங்கலப் பண்டிகை, திருப்பாலகன் இல்லாத பண்டிகையாக கொண்டாடப்படுகின்றது.

பெரும்பாலும், சமாதானத்தை விரும்பித் தேடுகின்றவர்களே சமாதானத்திற்கு பங்கம் விளைவிக்கின்றனர். இப்படிப்பட்டோர் தாம் வாழும் சமுதாயம் தற்போதுள்ள கீழ் நிலையிலேயே இருந்தால் தமக்கு இலாபகரமாயிருக்குமென எண்ணி, சீர்திருத்தம் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது, நெறியற்ற நிலைகளைச் சீர் செய்வது, பேச்சுரிமை வழங்குவது, தேவையான புதிய திட்டங்களை உருவாக்குவது, நிலவி வரும் பயனற்ற முறைகளை நிராகரிப்பது, இவைபோன்ற பல முன்னேற்றச் செய்கைகளை நாட்டிலும் சமுதாயத்திலும் ஏன் திருச்சபையிலுமே எதிர்க்கின்றனர் ஆனால் அதேசமயத்தில் தம்மை தாமே சமாதானத்திற்கு காரணர் எனவும் கருத துணிகின்றனர் இதுவே இன்றைய பரிதாப நிலைமை இந்நிலைமை சீர்ப்பட 'கிறிஸ்மஸ்' ஒளி தேவை

அன்பின் ஒளியாகிய கிறிஸ்மஸ் ஒளி நமது அறியாமையையும் பாவத்தையும் சூழ்ந்துள்ள இருளையும் அகற்றி சமாதான வழியில் நம்மை வழி நடத்த வல்லது திருப்பாலகனை நாம் சிலுவை ஒளியில் தான் காணலாம். கிறிஸ்மஸ் பெத்தலையின் விண் மீன் கொல்கோதாவின் ஒளியில் தான் ஒளிர்கின்றது.

ஆகவே பாவிகளை மீட்கக் கிறிஸ்து பிரான் சமாதான தூதுவராக வந்தார். என்ற நற்செய்தியை கூறவே தம்மை கிறிஸ்மஸ் அழைக்கின்றது. கிறிஸ்தவர்களாகிய நாம் சமாதானத்தை வளர்க்கும் உறவுகளை உண்டாக்கி இந்

## துரையப்பா சிவரட்ணம் மான்

சாவகச்சேரி திருச்சபையின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும் ஓய்வு பெற்ற நீர்ப்பாசன மேற்பார்வையாளரும் காலம்சென்ற திருமதி பொன்னம்மாவின் அன்புக் கணவருமான திரு துரையப்பா சிவரட்ணம் மான் அவர்கள் 22 10-99 அன்று கொருடாவில் சவகச்சேரியிலிருக்கும் அவரது இல்லத்தில் கர்த்தருக்குள் மகிமையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 27 10-99 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றது இவ்வாராதனையை சபை ஊழியர் அருட்திரு T H வசந்தகுமார், அருட்திரு P J சூரியகுமார் அருட்திரு S குகனேஸ்வரன் ஆகியோர்கள் இணைந்து நடாத்தினர்கள் இவ்வாராதனையில் சாவகச்சேரியில் வசித்த காலம் சென்ற திரு T S மான் அவர்களின் பிள்ளைகளான செல்வி தேவமலர், திரு டேவிட் ஆகியோரோடு கனடாவில் வசிக்கின்ற திருமதி பிலோமினா ஜெயந்திரன், திருமதி திரேஸா ஞானகுணசீலன், இங்கிலாந்தில் வசிக்கின்ற திரு திருமதி விக்ரோறியா சாந்தன் ஆகியோரும் பங்குபற்றினார்கள் தன்னுடைய தந்தையின் இறுதி வழிபாட்டில் கலந்து கொள்ள முடியாமற் போன இங்கிலாந்தில் வசிக்கும் செல்வி எலிசா மான் அவர்கள் தம்முடைய தந்தையின் கிறிஸ்தவ வாழ்வின் சிறப்பம்சங்களைக் குறித்து உணர்ச்சிபூர்வமாக எழுதி அனுப்பிய இரங்கலுரை திருமதி திரேஸா ஞானகுணசீலனால் வாசிக்கப்பட்டது மற்றும் திருமதி விக்ரோறியா சாந்தனால் ஒரு சிறப்புப்பாடல் பாடப்பட்டது.

கல்லறைத் தோட்ட ஆராதனையை சபை ஊழியர் அருட்திரு T. H வசந்தகுமார், அருட்திரு P. J சூரியகுமார், அருட்திரு S குகனேஸ்வரன் ஆகியோர் நடாத்தினார்கள்.

நற்செய்தியை அனைவரும் அறிய செய்யுந் திருப்பணியில் நம்மை ஈடுபடுத்தினால் எல்லையற்ற மகிழ்ச்சி அடைவோம். இறைவன் இவ்வுலகில் சமாதானத்தை வளர்த்து வரும் திருத்தொண்டிலும் நாம் பங்கு கொள்வோம். இதனை நினைந்து ஏற்ற முறையில் நத்தார் நவவருட கொண்டாட்டங்களை கொண்டாடுவோம் வாருங்கள்.

# இறைமகன் வருகை



இறங்கி வர மாட்டீரோ என்ற
மக்கள் குரல் கேட்டு - மனுவாக
இறங்கி வந்த இறைமகனே - காட்டினீர்
மக்களுக்கு ஒளி வழியை அன்று - நாம்
ஒளி வழியை அறிந்தும் அறியாதவர்களானோம்
மக்கள் இருள் வழி நடக்கலானார்
அருள் வழி மறைந்தது அதனால்,
ஆட்சியில் புகுந்தது அகம் பாவம்
மக்கள் அழித்தனர் போர் ஆயுதத்தால்
ஆட்சியில் இடம் பிடிக்க ஒரு பக்கம்
ஆயுதத்தால் அழிந்த மக்கள் மறுபக்கம்
ஆதரவற்ற அகதிகள் பல பக்கம்
சமாதானக் குரல் எழுப்பி எப்பக்கமும்
மக்கள் படும் அவலக் குரல் கேட்டுடுவீர்,
ஒன்றாகக் குரல் எழுப்பி நிற்கையிலே - அங்கே
மீண்டும் வருவேன் என்று வாக்களித்தவரே
வாரும் ஐயா இவ் வருகையின் நாளில்
ஆண்டு இரண்டாயிரம் காணும் நாம் - நல்
ஆட்சி காண வழி காட்டுடுவீர் - ஆணவ
ஆட்சி மாறி அன்பின் ஆட்சி மலர
மக்கள் உள்ளம் குளிர - வாரும்
மண்ணுலகிற்கென்று மனமுவந்து
அடிபணிந்து வேண்டுகிறோம் இந்நாளில்

- வண வி. என். தர்மகுலசிங்கம் -

## ஆசிரியரின் நத்தார் வாழ்த்து

உதயதாரகைக்கு இந்த வருடத்துடன் 136 வயது பூர்த்தியாகின்றது. இவ்வருடம் முழுவதும் உதயதாரகையை வெளியிடுவதற்குத் துணைபுரிந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நத்தாரின் மகிழ்ச்சி புதிய வருடம் முழுவதும் உங்களோடு இருப்பதாக!

கிருபா பவசிங்கம்
உதயதாரகை ஆசிரியர்

## தாரகைஒளி

''தாயினும் கீழாய்ச் செந்
தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி அவர் நலம்
எண்ணி
உழைத்திட நான் தவறேன்''
- பாரதிதாசன்

## குழந்தை இயேசுவைக் கண்ட வயோதிபர்

லூக்கா நற்செய்தி நூலில் அன்னாள், சிமியோன் எனும் இரண்டு வயோதிபர்கள் எருசலேம் தேவாலயத்தில் குழந்தை இயேசுவைக் கண்டு குதூகலம் அடைந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

அன்னாள், சிமியோன் ஆகியோரிடம் காணப்பட்ட மனோநிலை இருள் சூழ்ந்த இந்த நாட்டிலே இருக்குமானால் நாம் ஒன்றைககுறித்தும் வேதனையடையத் தேவையில்லை

குழந்தை இயேசு, அவர்களுக்கு இஸ்ரவேலின் வீடிவு சமீபமாகிவிட்டது என்பதினை உணர்த்தி நின்றது.

இஸ்ரவேலில் அப்பொழுது இருள் அந்தகாரம்! உறுதியற்ற நிலை!! வாலிபர்கள் சிலர் ரோம் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தூக்கிவிட்டார்கள், ஆயிரக்கணக்கான வாலிபர்கள் சிலுவைகளில் அறைந்து கொல்லப்படுகின்றனர். ரோமரைச் சாத்வீகமாக எதிர்த்தனர் பரிசேயர். ரோமருடன் ஒத்துழைத்தால் என்ன? என்றனர் சதுசேயர்.

இந்தச் சந்தடிகளைக்குறித்தும் குழப்பங்களைக்குறித்தும் இவ்விரு வயோதிபர்களும் கவலைப்படவில்லை. ஏனெனில் அவர்களுக்கு வரலாற்று நோக்கு இருந்தது. கடந்த காலங்களில் அற்புதமாக நம்மை வழிநடத்திய ஆண்டவர் தொடர்ந்து நம்மை வழிநடத்துவார் என்ற மனவுறுதியிருந்தது. மோசேயை, சிம்சோனை, தாவீதை கிதியோனை அற்புமாய் வழிநடத்திய ஆண்டவர் தொடர்ந்து வழிநடத்துவார்! நாம் கடவுளினாலே தெரிவு செய்யப்பட்ட ஜாதி. என்று உள்ளூர நம்பினார்கள்.

இம்முதியவர்களிடம் செயற்பாடு இருந்தது. தேவாலயத்தில் அவர்கள் சும்மாவிருக்கவில்லை. வருகிறவர்களுக்கும் போகிறவர்களுக்கும் ஊதரியமளித்தனர். தேவாலயத்தில் செய்ய வேண்டிய வேலைகளை முதிர் வயதிலும் செய்து வந்தார்கள்.

அவர்களுக்குள் தரிசனம் இருந்தது வருங்காலத்தில் கடவுள் செய்யப் போகின்றவைகளைக் குறித்து தெளிவான காட்சியிருந்தது. இதனாலேதான் தம்மைச் சூழவிருந்த அவலங்களைக் குறித்து அவர்கள் கவலைப்படவிலை. வரலாற்று நோக்கு, நிகழ்காலத்தில் கிரியை. வருங்காலத்தைக் குறித்த தரிசனம் இவையே அவர்களைக் குதூகல உணர்ச்சியுடன் வாழவைத்தன.

இதனாலே தான் குழந்தை இயேசுவைக் கண்டவுடன் சிமியோன'

புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் சகல ஜனங்களுக்கும் முன்பாக நீ ஆயத்தம்பண்ணின உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டன''
என்றார்

இது நத்தார், இருளில் வாழும் மக்களுக்கு அருளும் நற்செய்தி

எஸ். ஜே. எழுதுவது

## சென்றதினி மீளாது மூடரே!

கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றது வருடங்கள் நூற்றாண்டுகளாகவும், நூற்றாண்டுகள் ஆயிரம் வருடங்களாகவும் உருண்டோடுகின்றன.

கடந்த காலங்களில் பலவிதமான இன்பங்களையும் துன்பங்களையும் அனுபவித்திருக்கின்றோம். நமக்குப் பலர் இடர் செய்தனர் நாம் பலருக்கு இடர் செய்தோம்.

''தென்றலைத் தீண்டியதில்லை நான்; தீயைத் தாண்டியதுண்டு
களித்துக் கூவும் மாங்குயில்கள் என்பாதையில் வரவில்லை.
படமெடுத்தாடும் விஷப் பாம்புகள் நெளிந்திருக்கின்றன.''

என்று சிலர் தம் வாழ்க்கையைக் குறித்துச் சலிப்படையலாம்' தமக்கு ஏற்பட்ட நஷ்டங்களைப் பட்டியல் போட்டு அவற்றைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பவர்களை உளவியலாளர் கவலை சேர்ப்போர் அல்லது Grievanee Collectors என்று குறிப்பிடுவார்கள்.

துன்பத்தைச் சேகரிப்பவர்களுக்குத் தாராளமாக துன்பங்கள் வந்து சேரும் என்பது உளவியலாளர் கருத்து

சென்று போன அநியாயங்களைக் குறித்துச் சிந்திப்பதனால் யாருக்கு நஷ்டம்? ஒரு களியாட்டவிழா (Carnival) சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது மகிழ்வூட்டும் சுழற்சியில் (Merry go Round) மட்டும் ஒருவன் சோகமெயுருவெடுத்தாற் போல குதிரைமேல் உற்காந்திருந்தான். சுழற்சி நிற்கின்றது. மீண்டும் ஆரம்பிக்கின்றது. புதியவர்கள் குதிரையிலும், கார்களிலும் ஏறிக்கொள்கின்றர் கவலை தோய்ந்த மனிதன் இறங்காமல் குதிரையைப் பிடித்துக்கொண்டே திரும்பத் திரும்ப சுழற்சியில் வட்டமிடுவதினைக் ஒருவர் கண்ணுற்றார்' ஏன் ஐயா சோகத்தோடு merry go round இல் வலம் வன்கிறீர்கள்? என்று கேட்டார். இந்தக் களியாட்டா விழா' நடத்துபவர் எனக்கு ஆயிரம் ரூபா தரவேண்டும்; கடத்துகிறார்! அந்தப் பணத்திற்கு நான் இதில் ஓடிவிட்டுத்தான் இறங்குவேன் என்றார் அந்த நபர்.

''பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி'' என்று எழுதினார் பவுல் அப்போஸ்தலன் பின்னான வேதனைகள் மறக்கப்பட வேண்டியன. இது உடலுக்கும் ஆன்மாவுக்கும் நல்லது. இதனை மிகச் சிறந்த முறையில் விளக்குகின்றார் மகாகவி பாரதியார்.

சென்றதினி மீளாது மூடரே
நீர் எப்போதும் சென்றதையே
சிந்தை செய்து

துன்பம் என்னும் குழியில்
வீழ்ந்து குமையாதீர்

சென்றதனைக் குறித்தல் வேண்டாம். இன்று புதிதாய்ப் பிறந்தோம் எனும்எண்ணமதை உள்ளமதில் இசைத்துக் கொண்டு தின்று, விளையாடி இன்புற்றுவாழ்வீர்! தீமையெல்லாம் அகன்று போம், திரும்ப வாரா!!.

புதிய ஆயிரம் ஆண்டுக்குள் பிரவேசிக்கு முன் எமது துன்பங்களையும் சோகங்களையும் மூட்டைகட்டி எறிந்து விட்டு புத்துணர்வுடன் விறுநடைபோடுவோம்

மோசேயுடன் கூட இருந்தது போல உன்னோடும் கூட இருப்பேன் என்ற வாக்குத்தத்தை நம்பி குதூகலத்துடன் வாழ்வோம்.

அமெரிக்காவில்

## நமது கல்வி அதிகாரி

வட மாகாண கல்வி அதிகாரி திரு நா. தணிகாசலம்பிள்ளை அமெரிக்காவில் உள்ள Bowling Green பல்கலைக்கழகத்தில் விசேட பயிற்கிபெற்று வருகின்றார். அப்பல்கலைக்கழகம் வழங்கிய புலமைப் பரிசைப் பெற்று, அவர் செப்ரெம்பர் மாதம் அங்கு சென்றார். டிசம்பர் மாதம் 18ம் திகதி தமது பயிற்சிகளை முடித்துக்கொண்டு லண்டன் வழியாக யாழ்ப்பாணம் வந்துசேருவார் எனத் தெரிகின்றது.

## தற்காலிக கனிரஷ் விரிவுரையாளர்

நமது பண்டத்தரிப்பு திருச்சபை ஊழியன் திரு சின்னவன் ஸ்டீபன் ராஜ் யாழ் பல்கலைக் கழகத்தில் சமூக வியந்துறையிற் பகுதி நேர விரிவுரையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்

இவர் பண்டத்தரிப்பில் இருந்து தனது விரிவுரைகளை வழங்கி வருகிறார் எனத்தெரிகிறது

இவ்ர் இந்த வருடம் யாழ் பல்கலைக்கழக சகலகலா விற்பனருக்கான விருதைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது

## ஓம் பிராணவம்

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாய் இருந்தது.

யோவான் 1: 1 - 2

யோவானின் வாக்குக் கருத்துக்கு நிகராக இந்து சமயத்தில் நம் கவனத்தைக் கவரும் கருத்து ஓம் என்பதாகும். இதற்குப் பெயர் ''பிராணவம்'' என்பது இந்த ஒலி எவ்வாறு எழுந்தது என்பது தெரியாது. வேள்விகளில் மந்திரங்களுடன் இது உச்சரிக்கப்படுகிறது. இதை உச்சரிப்பதால் பல நன்மைகள் உண்டாகும் என்று நம்பப்பட்டது.

உபநிடதங்களில் இது பரம்பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஓம் என்பது பிரம்மம், ஓம் என்பது இதுவெல்லாம் (தைத்திரிய உபநிடதம் 1: 8) ''வேதங்கள் எல்லாம் எந்தப்பதத்தைக் குறித்து முறையிடுகின்றனவோ, தவங்களெல்லாம் எதைச் சொல்லுகின்றனவோ, மனிதர் எல்லோரும் எதை விரும்பி பிரம்ச்சாரிய வழியில் நடக்கின்றனரோ, அதை உனக்குச் சுருக்கமாகக் கூறுவேன் அதுதான் ஓம் (கடோப நிடதம் 2: 15) ஓம் என்பது இது வெல்லாம்'' என்பதற்கான விளக்கம் பின்வருமாறு தரப்பட்டுகிறது. எவையெவை இதுவரையில் இருந்தனவோ, எவையெவை இப்பொழுது இருக்கின்றனவோ எவையெவை இனி இருக்கப் போகின்றனவோ, அவையெல்லாம் ஓங்காரமே மற்றும், எது முற்காலத்துக்கப்பால் இருக்கின்றதோ அதுவும் ஓங்காரமே' (மாண்டுக்கிய உபநிடதம் - 1) பலியின் போது உச்சரிக்கப்படும் ஒரு உரத்த உச்சாடனத்தை 'உட்கீதா' (udgi-tha) என்பர். இது வாழ்க்கையின் சாரம்சத்தின் சாரம்சம் எனப்பட்டது (சாண்டோக்கிய உபநிடதம் 1: 2, 3). இத்துடன் இணைந்தே ஓம், ஓம், இந்த அசையே உலகெலாம் இன்னும் விளக்கவேண்டுமானால் கடந்தது நிகழ்வது. வருவது யாவும் ஓம் என்னும் வார்த்தையே. இந்த முக்காலத்தையும் கடந்து நிற்பது

ஞானா றொபின்சன்

எதுவானாலும் அதுவும் ஓம் என்னும் வார்த்தையே? என்கிறது மாண்டூக்கிய உபநிடதம். பிரகதாரன்ய உபநிடதம 3: 8 இல் யாக்ஞானவல்கியர் பிரபஞ்சத்தின் பின்னால் மறைந்திருக்கும் பரம்பொருள் 'அக்ஷரா' (akshara எழுத்து) என்கிறார். இதுவும் ஓம் என்பதையே குறிப்பிடும் இதே உபநிடதத்தில் (5: 14) பிரம்மாவின் வார்த்தை அல்லது காலடி இந்தப் புனித சொல் ஓம் என்பதாகக் கூறப்பட்டது. இந்த ஓங்காரத்தின் அ, உ, ம என்ற மூன்று ஒலிகளும் கடவுளின் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைக குறிப்பதாகக் கொள்ளப்பட்டது.

இந்து சமயம் குறிப்பிடும் ஓங்காரம் என்னும் இக் கருத்துக்கும் யோவான் தரும் வாக்குக் கருத்துக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படலாம் இந்து சம

(4ம் பக்கம் பார்க்க)

வேதநாயக சாஸ்திரியார்
இயற்றிப் பாடிய
## தாராட்டு



1. காவில் விலகுங்
கனியி னாலே விளைந்த
பாவவினை தீர்க்கவந்த
பாலகனே கண்வளராய்

2. திருந்தி வினை தீர்க்கத்
தேடி யுனை யாரும்
வருந்தியழைக்காமல் வந்த
மாதவமே கண்வளராய்

3. மாசற்ற ஞான
மனுவே மனுவேலே
தேசுற்ற யூதர்குலச்
சீர்வேந்தே நித்திரைசெய்

4. தோற்றும் நரக
சுவாலையில் வீழ்காமன
ரர்க்
காற்றுதல் சொல்லவந்த
ஐயனே நித்திரை செய்

5. தேவகோபஞ் சாபந்
தீர்வை நரகஞ்சாவு
பாவமெலா மாற்றவந்த
பாத்திபனே கண்ணுறங்
காய்

## திருவும் அருள்திருவும்



அருள் திரு: என்ன மாரிகாலத்தில் உங்களைத் தனிய விட்டு விட்டு எல்லாரும் கொழும்புக்குப் போய்விட்டார்கள் போல் இருக்கிறது

திரு: என்னைத் தனிய விடவில்லை நுளம்பு, மசக்குட்டி, அட்டை, தவளை, சாரை எல்லாரையும் துணைக்கு விட்டு விட்டுத்தான் போய் விட்டனர்

- மணிமாறன்

## காகம் பற்றிய பழமொழி



- காகத்தில் வெள்ளை உண்டோ?
- காக்கையைக் கண்டு அஞ்சுவாள் கரடியைப் பிடித்துக்கட்டுவாள்
- காக்காய் பிடிக்கிறவனுக்குக் காலம்.
- காக்காய்க்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
- காகம் ஏறிப் பனங்காய் உதிருமா?
- காககாய் கத்தப் பயந்து கணவனைக்கட்டிக் கொண்டாளாம்
- காக்கைக்கு அஞ்சுகுணம்
- காகம் கறுத்தென்ன வெளுத்தென்ன?
- காகம் இல்லாத ஊர் சோனகன் இல்லாத ஊர்
- காக்கையும் குயிற்குஞ்சை தன் குஞ்சைப் போல் வளர்க்கும்

## K. N. H. பிள்ளைகள் ஒன்று கூடல்

சென்ற செப்டம்பர் மாதம் 23, 24, 25, திகதிகளில் கப்புது என்னும் இடத்தில் நடந்த அகில இலங்கை K. N. H பிள்ளைகள் ஒன்று கூடலில் வவுனியா தூய பேது பெண்கள் இல்லத்தில் இருந்து. செல்வி M. ரஞ்சனா செல்வி S. விமலாதேவி செல்வி V சர்மிளா எனும் மூன்று பிள்ளைகள் கலந்து கொண்டனர். சென்ற ஆண்டு நடைபெற்ற O/L பரீட்சையில் இலங்கையில் இருந்து பரீட்சை எழுதிய பிள்ளைகளில் கூடிய பெறுபேறு பெற்ற பிள்ளையாக வவுனியா பெண்கள் இல்லத்தை சேர்ந்த செல்வி M ரஞ்சனா தெரிவு செய்யப்பட்டார். S. L. C-C C. A ஸ்தாபனத்தினால் இப் பிள்ளைக்கு அவ்பளிப்பும் நினைவுக் கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவருக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

## ஓம் பிரணவம்...

யங் குறிப்பிடும் ஓங்காரம் வெறும் தத்துவப் பொருளாக இருக்கும் ஒன்று; ஆனால் யோவான் குறிப்பிடும் வாக்கு வரலாற்றில் செயலபட்டவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறவர். ஆயினும் நற்செய்தியை இந்துக்கள் புரிந்துகொள்ளச் செய்ய நாம் அன்னாருடைய இந்தக் கருத்தைப் பயன்படுத்துவதில் தவறில்லை எனலாம் அனைத்துலகுக்கும் காரணம் ஓம் முத்தொழிலுக்கும் கர்த்தா ஓம்; மனித வாழ்வில் இலக்கு ஓம் என்கிறது இந்து சமயம் இந்த ஓங்காரமாகிய வாக்கு கிறிஸ்து தான் எனப் பக்தியுடன் நாம் விளக்கினால் அது தவறாகுமோ?



## உங்களுக்குப் பிறந்திருக்கிறார்

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" லூக் (2: 11)

வயல் வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கே கர்த்தருடைய தூதனால் இந்த நற்செய்தி கூறப்படுகிறது! அன்று பேய்ப்பர்களுக்கு கூறப்பட்ட நற்செய்தி அவர்களுக்கு மாத்திரமல்ல; இன்று நம் ஒவ்வொருவருக்கும் கூட தேவனால் கொடுக்கப்படும் நற்செய்தியாகும்! "கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குப் பிறந்திருக்கிறார்".

தேவன் நம் ஒவ்வொருவரின் மீட்புக்காகவுமே தம் ஒரே பேறான குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார் எனக்காகவும். உங்களுக்காகவுமே கிறிஸ்து பாலகனாக அன்று பிறந்தார். அவரின் பிறப்பை இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடும் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும், "உங்களுக்காகப் பிறந்த கிறிஸ்து" பிறந்துள்ளாரா?

பிறந்த நாளைக் கொண்டாடும்போது, அந்தக் கொண்டாட்டங்களின் மத்தியில் முதலிடம் வகிப்பவர் அந்தப் பிறந்த நாளுக்குரிய நபரேயாவார். அவர் தம் மத்தியில் இல்லாது வெளிநாட்டிலோ அல்லது வெறெங்கோ இருக்கும்போது அவரில்லாமல் நாம் பிறந்த நாள் கொண்டாட்டங்களை செய்வதில் அர்த்தமில்லாமல் போய்விடுகிறது.

கிறிஸ்துவின் பிறந்த நாள் கொண்டாட்டங்களின் மத்தியில் முக்கிய இடம் வகிப்பவர் கிறிஸ்து தான். கிறிஸ்து பிறந்திருக்காவிட்டால் இன்று கிறிஸ்மஸ் கொண்டாட்டமே இல்லை. அவரின் பிறப்பைக் கொண்டாடும் நாளில் பிறந்த நாளுக்குரிய நபராகிய "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" உங்கள் கொண்டாட்டங்களின் மத்தியில் முக்கிய இடம் வகிக்கிறாரா? அல்லது அவரை தாவீதின் ஊரிலேயே விட்டு விட்டு பிறந்த நாளைக் கொண்டாடுகிறீர்களா? அவர் உங்கள் வாழ்க்கையின் மத்தியில் கிறிஸ்மஸ் நாயகராக இருக்கிறாரா? உங்கள் குடும்பத்தை அவர் ஆளுகை செய்கிறாரா?

சகோதரனே, சகோதரியே, புத்தாடை அணிந்து அயலவர்கள் நண்பர்களுடன் கிறிஸ்மஸ்ஸை கொண்டாடும் உன் உள்ளத்துக்குள் அவர் பிறந்துள்ளாரா? கிறிஸ்து உலகில் பிறந்தநாள்தான் கிறிஸ்மஸ்! அதேபோல "கிறிஸ்து என்றைக்கு உனக்குள் பிறக்கிறாரே அந்த நாள் தான் உன் வாழ்க்கையில் கிறிஸ்மஸ்". கிறிஸ்து உனக்குள் பிறக்காமல் கிறிஸ்மஸ்ஸை கொண்டாடுவதில் எதுவித அர்த்தமுமேயில்லை! அது அர்த்தமற்ற கிறிஸ்மஸ்தான்! ஆகவே அர்த்தத்துடன் இன்று கிறிஸ்மஸ்ஸை கொண்டாடு!

— சத்தியவசனம் —

## நன்றி செலுத்தும் ஆராதனை
### திருமதி பரஞ்சோதி ஐயாத்துரை

சாவகச்சேரி திருச்சபையின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும் ஓய்வுபெற்ற டிறிபேர்க் கல்லூரி ஆசிரியையும் 27 - 9 - 99ல் கொழும்பில் அவரது மகன் திரு ஏ ஞானதாஸ் அவர்களுடைய இல்லத்தில் கடவுளின் மகிமைக்குள் பிரவேசித்தவருமாகிய திருமதி. பரஞ்சோதி ஐயாத்துரை அவர்களின் வாழ்விற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை 30-10-99 மாலை 3 00 மணிக்கு டாக்டர் திருமதி V. R. டேவிட் அவர்களின் "மலர் மனை" இல்லத்தில் நடைபெற்றது இவ்வாரதனையை சபை ஊழியன் அருட்திரு T. H வசந்தகுமார் நடத்தினார் அருளுரை அருட்திரு P J. சூரியகுமார் அவர்களினால் வழங்கப்பட்டது இவ்வாரதனையில் திருச்சபை மக்களும், பொது மக்களும் நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்களின் தலைவர்களும் ஏராளமாக கலந்து கொண்டார்கள்.

கடவுளின் மகிமைக்குள் பிரவேசித்த திருமதி பரஞ்சோதி ஐயாத்துரை அவர்களின் சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வு சாவகச்சேரி பிரதேச மக்களின் உள்ளத்தில் ஓர் உன்னத இடத்தை கொடுத்துள்ளதை அவரது வாழ்விற்காக நன்றி செலுத்தும் வழிபாட்டில் கூடியிருந்த மகாஜன கூட்டம் சாட்சி பகர்ந்தது.

## நுண்கலைப் பிரிவில் புதிய கட்டடம்

மருதனார் மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நுண்கலை பிரிவில் புதிய கட்டிடங்கள் நவம்பர் மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை துணைவேந்தரினால் திறந்து வைக்கப்பட்டது இந்த நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் பேராயர் ஜெபனேசன் ஜெபம் செய்து புதிய கட்டடத்தை ஆசிர்வதித்தார். விழாவிற்கு கலைப் பீடாதிபதி பேராசிரியர் S பாலச்சந்திரன் தலைமை தாங்கினார்.

## விஞ்ஞான பீடத்தலைவர் தெரிவு

யாழ் பல்கலைக் கழகத்தில் பௌதிகவியல் பேராசிரியராக பணிபுரியும் R குமாரவடிவேல் விஞ்ஞான பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது வரை காலமும் உயிரியல் தலைவர் பேராசிரியர் V T சிவஞானசலிங்கம் விஞ்ஞான பீடாதிபதியாக பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

## The Wisemen and the Shepherds

The gospel according St. Matthew says that when Jesus was born in Bethlehem wisemen came from the East to adore Him. St Luke records that when Jesus was born in a manger the shepherds went and worshipped Him. We do not know who went first. We can assume that the shepherds of Bethlehem who watched their flocks by night were first to worship infant Jesus. The "Sastris" of the East no doubt would have taken sometime to reach Bethelhem But it is clear that the simple shepherds and the wise men went to see Him Jesus. needs both the wisemen and the ordinary shepherds.

During the first century the Gnostics believed that religion was strictly a matter for the intellectuals In the East 'Gaanamarga' was believed to be supreme way for salvation. There is a feeling that Christian faith is too plain and lacks sophistication. Lord Jesus explained His Gospel in extreamely simple words. Eventhough the style was very simple the message was profound. It is true that some contemporary theological writings are beyond the comprehension of the average man. For them they appear to be too heavy, but there are many academically trained minds which relish the deep and intricate theological discourses. Thanks to St. Aquinas who won for Christianity pride of place in the Universities of the West.

No doubt there is a great need for wise men in God's Kingdom. There are critics of Christianity who say that Christian faith is more suited for shepherds, fishermen, tanners and other childlike minds. But the Babe in Bethlehem lured both the "Sastris" and the "Soodras" Both came and worshipped Jesus because He needed both. What the simpleton cannot comprehend, the scholar will elucidate and what is confusing to the scholar will be understood by the childlike faith of the plain man.

Our task is to preach the Gospel in a way the little children understand, and philophers relish. The great minds and the simple folks have place in his kingdom.

The Christian Missions which are enthusiastic about the conversion of the poor in the Afro Asian countries and Latin America, just cannot afford to lose the scientific minds of the West, which are fast becoming secular.

## Appreciation
## DR. D. J. THURAIRATNAM

Dr. D. J. Thurairatnam passed away in Bowling Green University, USA on Friday the 19th November 1999

His death was not totally unexpected. He was suffering from a very rare disease — gradual deterioration of the lungs. Since it was a very rare disease much research was not done on its cause and cure. The manner in which Dr. Thurairatnam prepared himself for his death was a great lesson for me. Being a good sports man and accomplished gentleman he did not want to frighten anybody nor was he frightened of death.

Till he became unconscious he was showing his wit and sense of humour. I met him last at Ohio Mdical College Hospital on wednesday the 10th of November 1999 Even at that time he did not lose heart.

He did not have appetite but in order to make his loved ones happy he ate a little. When I came back to Sri Lanka message came that he had gone.

Dr. D. J. Thurairatnam and my brother late Dr. Jeyaseelan were classmates. Both were born in the year 1942. Later Dr Thurairatnam and I were teachers at Jaffna College, Vaddukodai. That was from 1971-1794. It was during this period I came to know him very well. He was very busy in the sports field and at Chundikuli where he had found his future life partner.

In 1974, Dr. Thurairatnam went to Bowling Green University and gradually rose to very high position in that Campus. He was Dean of International Students Progrmme at the time of his death.

Dr. Thurairatnam did not forget his Alma Mater, his friends in Jaffna and the Church at Vaddukoddai. Whenever I wrote to him on behalf of a poor family or a student he responded most enthusiastically.

Dr. Thurairatnam and I became very close after the demise of my younger brother Dr. Jeyaseelan. For his massage of sympathy I wrote back to him saying

"The people who came after us, have gone before us"

When I think of Dr. Thurairatnam's death I am prompted to say the same thing.

Dr. Thurairatnam's family and my family had many similarities. He also had four brothers and one sister. Dr. Jeyaseelan was the pride of our family. So was Dr. D J. Thurairatnam in his family. When the best people are taken away we can only repeat the prayer

"God I do understand,
but I trust you".

Dr. Thurairatnam was a highly respected administrator at the Bowling Green University. It was because he was honest, efficient, straightforward and humane. I spoke to many adminsitrators at Bowling Green University. They would say

"Well we will ask Dante about it".

Dr. Thurairatnam amassed much wealth in USA, but he did not lose the common touch. Administrators of the Diocese, Jaffna College and also vehement critics of the Administrators will go to him for consultation He was acceptable to all parties. He loved all and was able to understand the problems of everyone.

While I was in Bowling Green, a person who came to see him from Canada said, "We just cant afford to lose him". Dr. Thurairatnam was a dynamic person who died like a soldier.

In 1970 when his father Mr. K. C. Thurairatnam died I closed my tribute with the following. I wish to say the same thing about the third child of Mr. K C T

"Sampson hath quit himself,
Like Sampson, and heroically
Finished a life heroic".

— Bishop. S. J.

### Schools Close for Vacation

Schools in Sri Lanka close for Christmas vacation on Saturday the 4th of December 1999. The G C E (Ordinary Level) Examination is scheduled to beging on Monday the 6th of December 1999.

### FAX Machines and E - Mail

FAX Machine and E-Mail have come to Vaddukoddai.

Fax Machine is at Diocesan Office with the Number 0094 – 070 – 212424.

The E - Mail is at Jaffna College Campus.

No jaf col @ slt net. lk

### Opening of New Building at Ramanathan Academy.

New bulding of Ramanathan Academy of Fine Arts at Urumparai - Maruthanamadam Road was declared opened on Monday the 29th November 1999 by the Vice Chancellor Prof. P. Balasundarampilai of the University of Jaffna. The function was presided by Prof: S. Balachandran Dean of the Faculty of Arts.

At the opening worship prayer was offered by our Bishop the Rt. Rev. Dr. S. Jebanesan: Speeches were made by the Vice Chancellor, Deans of the Faculties and the Bishop.

Dr. S. Jeyarasah, Director of Ramanathan Academy of Fine Arts proposed the vote of thanks.

## New Bishop of Thirunelvely

Rt. Rev. S. Jeyapaul David was appointed Bishop in Thirunelveli Diocese in November 1999.

Rt. Rev. Jeyapaul David was born in 1944, and holds a B. A. B. D. Degrees. He was ordained Presbyter in 1969. His wife is Mrs Violet Jeyapaul. The Jeyapaul's have two daughters and two sons. Before becoming Bishop he served as Pastor, at Habour Nagar Tuticorin.

### Two New Temporary Assitant Lecturers

Mr. S. Stephen Raj (B. A. Hons.) Sociology, winner of the All Rounders Prize for 1999, has been appointed Temporary Assistant Lecturer at the University of Jaffna. Miss Nanthini Nalliah, B A (Hons) Christian Civilization, who obtained the highest marks in 1999 batch has been appointed Temporary Assistant Lecturer in Christian Civilization at the University of Jaffna. She is a member of the C S I Church, Karainagar

## 60th Birthday Celebrations

The 60th Birth Day of Rev. Fr. N. Savarimuttu, Director of Arts Centre( Thirumarai Kala Mandram) was celebrated on Monday the 29th November 1999. The function was presided over by Prof: P. Balasundrampillai, Vice Chancellor, of the University of Jaffna.

**Christmas Special Issue**

# "JOY" TO THE WORLD"





The anniversary of the birth of Christ has always been the occasion of a festival of joy. From the time of the message of the angels 2000 years ago to the present, the Christmas season has been the sign of the blessing of the world because God came among men. It is a time when the spirit of the occasion tends to overflow the limits of those who call themselves Christians and to bear a significance to the world at large. It is not suprising that this is so, for the joy which was annonnced at Christ's birth was not circumscribed: it was universal in its scope: "Peace on earth, good will to men." Has the experience of twenty centuries anything to teach us about coming of this joy among men?

Jesus Christ believed that it wss worth while to increase the sum total of human happiness. He went about doing good. He relieved men of the diseases of their bodies; He lifted them out of the mire of sin and degradation; He freed them from the terrors of superstition and the tyranny of caste and creed; he graced with his presence the common gatherings of men so that by the so called holy men of that age he was classed with the winebibbers and worldlings; He lived a life in which a constant service for the people about him was combined with a spritual life of union with God unparalleled in history. He believed himself especially sent to bring joy into the hearts of men, "to proclaim the acceptable year of the Lord" He made the requirement for entering into the joy of his kingdom some social service on behalf of the unfortunate, "Inasmuch as have done it unto one of the least of these." The spirit of brotherly service in this world which he exemplified has been the key which has opened the door to all vital progress and to the real joy of men. If we look back through the history of the development of Christianity, we can see that wherever men have truly caught the meaning and spirit of the life of the Master, spirit of Christianity has gradually become organized into movements for social uplift in a hundred different forms. The healing touch of the Master is extended in splendidly equipped hospitals and endowed institutions for the study and prevention of disease. Christian organizations everywhere bring to the unfortunate the way of escape from debasing habits, and sin. Reformatories, boys homes homes for fallen women. Workshops for unemployed are products of the Christian spirit Organizations to uplift downtrodden like KNH. CCFC Bread for the World Christian Aid Oxfam and hundreds of others bear ample testimony. Slavery as an institution has utterly been cast out of world and it is Christian effort that will make it an unknown thing in the future world. The recognition of the status of women and little children has come through Christian civilization. The right of the poorest and weakest member of society to education such as will fit him to live happily and well, is the product of the teaching and example of Jesus, Christianity has continued to foster and to send forth those servants of society who were indued with this spirit. Salvation has become not merely an individual question, but a social question here and now.


Christianity has passed though some dark places. Times were when the Church throught that as the second - coming was near at hand, there was little use in the advancement of knowledgs and human progress. There was also a time when men so far lost sight of Christ's example that they sought to leave the world and withdraw themselves to a solitary contemplation of the infinite. Thank God we have left those times far behind and we are now assured that the best preparation for the life to come is the fullest possible life we and our fellow men can live here and now As one writer has put it, "Christianity is bent on increasing the amount of effective human brother hood in the world." We are more certain than ever before that living in this world is worth while and that the greatest attainniments spiritua ly come to those who try to make life fuller, nobler and happier for their fellow men. And in fuller brightness than ever before we see the leadership of the humble Nazarene whose advent the angels truly said would bring joy to the world.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 03rd Deceber 1999 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.

## Workers Meet

The C S I Pastors serving in Jaffna area met at the Bishop's House on Wednesdy the 8th of December 1999 for a Christmas get - together. The Bishop spoke to the Workers and Mrs. S. V. Jebanesan spoke to the Pastors wives After. Christmas Lunch, Christmas Gifts were given to Pastors, Pastor's wives and Children.

# Our Pastors in 1898



Standing Left to Right

1) Rev R Brayant, 2) Rev W Joseph, 3) Rev C D Velupillai, 4) Rev Issac Paul 5) Rev M Welch 6) Rev S Veerakanthy 7) ... ... ? 8) ... ... ?

Seated Left to Right

1) Rev S Eliyathamby, 2) ? 3) ? 4) Rev T P Hunt, 5) Rev W P Nathaniel 6) Rev B H Rice, 7) ... ... ?

Pastors who served in this period not identified. Rev J M Sanders, Rev F Anketell, Rev C M Sanders, Rev S John, Rev F Asbury, Rev D Stickney, and Rev J S Christmas.

## OBITUARY

### *Dr Ida Adams*

Professor A J. wilson Emeritus Professor of Political. Science, University of New Brunswick in a communication to the Editor states: It is with utmost regret I inform you and through you the numerous strands of the public in Jaffna to whom the late Dr. Ida Adams was an icon of selfless dedication and the maker of untold sacrifices, the sad news of this much loved and widely respected doctor's passing some two weeks ago in her colombo residence.

Every person who came in contact with this noble physician was deeply touched by her humanity and her loving kindness. She was widey known and admired by the people in and around Inuvil hospital. She devoted herself to many projects in the vicinity of her work place Inuvil ensuring that these came to fruition.

Dr. Adams was predeceased by her husband Mr. Christie Adams in the late fifties. She leaves behind a son Dr Man Singh, two grandsons and her daughter in law Margaret. On a personal note I like to say that I shall deeply miss this loving kind hearted and caring sister. At the time of her passing she had lived well into her eighties and had enjoyed a healthy life

# Christmas Special Issue